ஆண்டில் அவர்களது தொகுதி மக்கள் அவர்களைப் புறக்கணிப்பார்கள், இது நிச்சயம் நடக்கும் என்பதைச் சொல்லி, அமைகிறேன். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

முற்பகல் 11–25

6. கவன ஈர்ப்பு

தளி தொகுதி, அக்கொண்டப்பள்ளி—அனுசோனை மற்றும் கெலமங்கலம்—தேன்கனிக்கோட்டை தார்ச் சாலைகளை உடனடியாகச் செப்பனிட வேண்டிய அவசியம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. எச். ராஜா, திரு. கே.வி. முரளிதரன், திரு. கே.என். இலட்சுமணன், திரு. வே. கிருஷ்ணமூர்த்தி மற்றும் திரு. கே. கோபிநாத் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கே.வி. முரளிதரன்.*

***திரு. கே.வி. முரளிதரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதிக்குட்பட்ட அக்கொண்டப்பள்ளி முதல் அனுசோனை வரையிலும், கெலமங்கலம் முதல் தேன்கனிக்கோட்டை வரையிலும் உள்ள தார்ச் சாலையை உடனடியாகச் செப்பனிட வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:*

அறிக்கை

1. அக்கொண்டப்பள்ளி முதல் அனுசோனை வரை:

கிருஷ்ணகிரி (நெ) கோட்டத்திற்குட்பட்ட இராயக்கோட்டை-- அத்திப்பள்ளி சாலை கி.மீ. 0/0–39/8 எனும் 39.80 கி.மீ. நீளமுடைய அரசு மாநில நெடுஞ்சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 15/0–27/0 வரை உள்ள சாலை ஒரு வழித்தடப் பகுதியாகும். தற்போது கி.மீ. 22/0–29/0 வரை உள்ள பகுதி 2004–2005 ஆம் ஆண்டு மாநில மற்றும் மாவட்ட நெடுஞ்சாலை உறுதிப்படுத்தும் திட்டத்தில் சேர்க்கப்பட்டு,

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2005 மார்ச் 29] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

ரூ.188.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, இம்மாத இறுதிக்குள் ஒப்பந்தம் கோரப்படவுள்ளது. மீதமுள்ள கி.மீ. 15/0–22/0 வரை உள்ள பகுதி 2005–2006 ஆம் நிதியாண்டில் மாநில நெடுஞ்சாலைகள் மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்யப்படும்.

2. கெலமங்கலம் முதல் தேன்கனிக்கோட்டை வரை:

இச்சாலையானது, கிருஷ்ணகிரி (நெ) கோட்டத்திற்குட்பட்ட தேன்கனிக்கோட்டை– கெலமங்கலம் சாலை கி.மீ. 0/0–12/8 எனும் 12.80 கி.மீ. நீளமுடைய அரசு மாவட்ட முக்கியச் சாலையாகும். இச்சாலை மேம்பாட்டுப் பணி--2005–2006 ஆம் நிதியாண்டில் மாவட்ட முக்கியச் சாலைகளை மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்யப்படும்.

திரு. கே.வி. முரளிதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றாகப் படித்துப் பார்த்தேன். 2005–2006 ஆம் ஆண்டில் இந்த இரண்டு சாலைகளும் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்கிறேன். 2004–2005–ல் ரூ.10 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சரால் அறிவிக்கப்பட்டது. அந்த நிதி எந்தெந்தச் சாலைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்குமாறு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி நெடுஞ்சாலைக் கோட்டத்திற்குட்பட்ட இராயக்கோட்டை முதல் அத்திப்பள்ளி சாலை கி.மீ. 0/0–லிருந்து 39/8 எனும் 39.80 கி.மீ. நீளமுடைய அரசு மாநில நெடுஞ்சாலைகள் அமைந்துள்ள இரண்டு ஊர்கள் அக்கொண்டப்பள்ளி மற்றும் அனுசோனை. கி.மீ. 0/0–லிருந்து இராயக்கோட்டை தொடங்குகிறது. கி.மீ. 39/8, நமது மாநில எல்லை ஒத்தகொண்டப்பள்ளி என்ற ஊருடன் முடிகிறது. அத்திப்பள்ளி கர்நாடக மாநிலத்தில் 6 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள ஊர். கி.மீ. 15/0, அனுசோனை என்ற ஊரிலிருந்து ஆரம்பிக்கின்ற சாலையாகும். கி.மீ. 23/0, அக்கொண்டப்பள்ளி அமைந்துள்ள ஊர். 22 கி.மீ. முதல் 29 கி.மீ.,--6 கி.மீ. நீளமுள்ள பகுதி 2004–2005 ஆம் ஆண்டு மாநில நெடுஞ்சாலை உறுதிப்படுத்தும் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, இந்த ஒரு வழிப் பாதையை உறுதிப்படுத்த ரூபாய் 64 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. தற்போது 2005–2006 மாநிலச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் கி.மீ. 12/0 முதல் 28/0 வரை உள்ள 16 கி.மீ. தூரம், ரூபாய் 275 இலட்சத்திற்கு இரு வழிப் பாதையாக அகலப்படுத்தி

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2005 மார்ச் 29

உறுதிப்படுத்த அனுமதி அளிக்கப்படவுள்ளது. கி.மீ. 0/0 முதல் 12/0, இப்பகுதி, காவேரிப்பட்டினம் தொகுதியைச் சார்ந்த ஒரு வழிப் பாதையாகவும், இப்பகுதி கடந்த 10 ஆண்டுகளாக சரிவர அதனுடைய தார் நொடிகள் சீராகப் போடப்பட்டு போக்குவரத்துக்கு ஏற்றதாக அந்தச் சாலை உள்ளது என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன். கி.மீ. 29 முதல் 39/8, இப்பகுதி ஓசூர் தொகுதியைச் சார்ந்த இரு வழிப் பாதையாகும். தற்போது அந்தச் சாலை நல்ல நிலையில் உள்ளது என்பதனையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.வி. முரளிதரன்.

திரு. கே.வி. முரளிதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரின் விளக்கத்திற்கு நன்றி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கிறபோது, 2004–2005–க்கு ரூ.10 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த நிதி எந்தெந்தச் சாலைகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–30

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளி தொகுதியில் மட்டும் 2005–2006 நிதியாண்டில் ரூ.354 இலட்சத்திற்கு மாநிலச் சாலையையும், ரூ.553 இலட்சத்திற்கு மாவட்ட முக்கியச் சாலையையும், ரூ.728 இலட்சத்திற்கு மாவட்ட இதர சாலைகளையும் மேம்படுத்த மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் அனுமதி வழங்கப்பட உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

7. அறிக்கைகள் அளித்தல்

(அ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல், அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல், திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2005 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து ஆறாவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.